# கடற்கரை கவியரங்கு– 661

## நாள்: 03-05-2026

# எண்ணிக் களித்திடுவோம்!

பொருந்தா கனவுள் பொதிந்த
        மனமே போராட்டம் காணும்!
இருந்ததை எண்ணி வருந்தும்
        நிலையை இயல்பாய்க் கடந்திடுவோம்!
திருந்தா மனமோ தீமைகளன்றி
        நாளும் எதைத்தான் காணும்?
வருந்தா மனத்தில் வாழ்கைப்
        பரல்களின் வகையது தெரியும்!

இருப்பதை கொண்டு வாழ்வின்
        அரங்களில் இனிமை தேடிடுவோம்!
கரும்பின் நுணியது கசப்பாய்
        இருப்பது படைப்பின் முகவரியாம்!
இரும்பைக் கடித்திட எவர்தான்
        முயல்வரோ எண்ணிப் பாருங்கள்!
இருக்கும் வரையில் இனிதாய்
        வாழ்வோம் என்பதைக் கொள்வோமே!

விரும்பும் வாழ்க்கை வேடிக்கை
        யானதோ, எண்ணிப் பாருங்கள்!
அரும்பும் மலரின் அழகும்
        தானே அடுத்து வாடிடுமே!
பருந்தைப் பார்த்து விரைந்த, கோழியின்
    குஞ்சு பாரினில் நிலைத்திடுமே!
அருந்தவமாக வாழ்வை எண்ணி,
        அடுத்து நாமும் மகிழ்ந்திடுவோம்!

**- கவிஞர் கவிவளவன்.**
03-05-2026